நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## கோயம்பேட்டில் காய்கறி விலை குறைந்தது

First Published : 19 Mar 2012 05:53:09 AM IST



சென்னை, மார்ச் 18: வரத்து அதிகரிப்பால் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை குறைந்துள்ளது.

மொத்தச் சந்தைகளில் மட்டுமே காய்கறிகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. ஆனால், சில்லறை விற்பனைக் கடைகளில் எப்போதும் போலவே காய்கறிகள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஆசியாவிலேயே மிகப்பெரிய காய்கறிச் சந்தையாக கருதப்படுவது கோயம்பேடு மார்க்கெட்.

இங்கு தமிழகம் மட்டுமல்லாமல் ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்தும் லாரிகள் மூலம் காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன.

ஆந்திரம், கர்நாடகத்தில் கடந்த ஆண்டு பெய்த பருவமழையின் விளைவாக அங்கு காய்கறிகளின் விளைச்சல் நன்றாக உள்ளது. இதன் காரணமாக, அம் மாநிலங்களில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அதிக அளவில் காய்கறிகள் வரத் தொடங்கியுள்ளன. இதனால், காய்கறிகளின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட் விலை நிலவரம்: (அடைப்புக் குறிக்குள் பழைய விலை) தக்காளி - ரூ. 15 (ரூ. 10), உருளைக்கிழங்கு - ரூ. 10 (ரூ. 8), சேப்பக்கிழங்கு - ரூ. 15 (ரூ. 10), பெரிய வெங்காயம் - ரூ. 7 (ரூ. 5), சின்ன வெங்காயம் - ரூ. 10 (ரூ. 40), கத்திரிக்காய் - ரூ. 15 (ரூ. 8), கேரட் - ரூ. 20 (ரூ.

25), பீட்ரூட் - ரூ. 15, (ரூ. 20), பீன்ஸ் - ரூ. 30 (ரூ. 40), நூக்கல்ஸ் - ரூ. 20 (ரூ. 25), வெண்டைக்காய் - ரூ. 20 (ரூ. 10), முட்டை கோஸ் - ரூ. 8 (ரூ. 5), முருங்கை - ரூ. 25 (ரூ. 60).

காய்கறிகளின் விலை குறைந்திருப்பது குறித்து கோயம்பேடு அனைத்து வியாபாரிகள் சங்கச் செயலாளர் எம். அப்துல்காதர் கூறியதாவது: கடந்த 2 மாதங்களாக பிற மாநிலங்களிலிருந்து எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் காய்கறிகள் வருகின்றன.

குறிப்பாக ஆந்திரத்தில் வெங்காய சாகுபடி கணிசமாக அதிகரித்துள்ளதால் வெங்காயத்தின் விலை கடுமையாக சரிந்துள்ளது.

ஆனால், அந்த அளவுக்கு காய்கறிகளின் தேவை இப்போது இல்லை. மேலும் இது முகூர்த்த காலம் இல்லை என்பதால் மொத்தமாக காய்கறிகள் கொள்முதல் செய்வோரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. எனவே காய்கறிகளின் விலை குறைந்துள்ளது என்றார் அவர்.

சில்லறைக் கடைகளில் விலைக் குறைப்பு இல்லை காய்கறிகளின் விலை மொத்தச் சந்தைகளில் குறைந்தாலும் சில்லறைக் கடை வியாபாரிகள் விலையைக் குறைக்காமல் பழைய விலைகளிலேயே விற்பனை செய்து வருகின்றனர்.

உதாரணமாக, ஒரு கிலோ சின்னவெங்காயம் ரூ. 10-ஆக மொத்தச் சந்தைகளில் விற்பனையானது. ஆனால், சில்லறை விற்பனைக் கடைகளில் சின்ன வெங்காயம் கிலோ ரூ. 25-ஆக விற்பனை செய்யப்பட்டது.

அதேபோல், வெண்டைக்காய், உருளைக்கிழங்கு, தக்காளி, கேரட் ஆகியவற்றின் விலையும் சில்லறை விற்பனைக் கடைகளில் குறைக்கப்படாமல் விற்பனை செய்யப்பட்டது.

## குறைதீர் கூட்டம்: விவசாயிகள் புறக்கணிப்பு

First Published : 18 Mar 2012 10:49:38 AM IST

உதகை, மார்ச் 17: உதகையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை புறக்கணித்து விவசாயிகள் வெளியேறினர்.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் பங்கேற்பதற்காக தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஹால்துரை மற்றும் துறையின் அனைத்து அலுவலர்களும், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும், விவசாயிகளும் வந்திருந்தனர். விவசாயிகள் கையில் கருப்புப் பட்டை அணிந்து வந்திருந்தனர்.

கூட்டத்தின் தொடக்கத்திலேயே விவசாய நிலங்களில் ஜேசிபி, பொக்லைன் உள்ளிட்ட இயந்திரங்களை இயக்குவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனுமதி மறுக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கூட்ட அரங்கிலிருந்து வெளியேறினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியது:

மாவட்ட நிர்வாகத்தின் இத்தகைய தடை உத்தரவின் காரணமாக விவசாயப் பணிகளையே மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், போதுமான அளவில் வேலையாட்கள் கிடைக்காததால் குறித்த காலத்தில் விவசாயப் பணிகளை முடிக்க முடியாத நிலை ஏற்பட்டு பெரும் இழப்புக்கு உள்ளாவதாகவும் தெரிவித்தனர்.

இதில் விவசாயிகள் வெளியேறினாலும், மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அதிகாரிகள் மற்றும் ஒரு சில விவசாயிகளை வைத்து கூட்டம் நடத்தப்பட்டது. இதில் விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட குறைகள் தொடர்பான மனுக்கள் தொடர்பாக விவாதித்து உரிய துறைகளுக்கு அனுப்பப்பட்டது.

மேலும், தோட்டக்கலைத் துறையின் மூலம் இடுபொருட்களை விநியோகித்தல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் செயல்பாடுகள், விவசாயிகள் வழங்கும் பாலுக்கு உரிய விலை நிர்ணயித்தல், வனத்துறையின் சார்பில் தீத்தடுப்பு கோடுகள் வெட்டப்பட்டு, காவலர்கள் நியமிக்கப்பட்டது உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## கரும்பு டன்னுக்கு ரூ. 3000 வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

First Published : 18 Mar 2012 01:10:15 PM IST

அரியலூர், மார்ச் 17: கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3000 என விலை நிர்ணயம் செய்து, தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கீழக்கொளத்தூரில் அண்மையில் நடைபெற்ற இந்தச் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பதிவு செய்த 12 மாதங்களுக்குள் நடவு செய்யப்பட்ட கரும்பை வெட்ட ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட கரும்பு குறைவாகவே அரவை செய்யப்படுகின்றன. இதை தனியார் சர்க்கரை ஆலை கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரும்பு வெட்டும் இயந்திரத்தை ஆலை நிர்வாகம் உடனடியாக கொண்டு வர வேண்டும்.

ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய சர்க்கரையை உடனடியாக வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்க உறுப்பினர் ஆதிமூலம் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர்கள் மோகன், சேகர், மாலதி கருப்பையா, வழக்குரைஞர் மாரியப்பன், விவசாயச் சங்கப் பொறுப்பாளர்கள் முருகேசன், தேவேந்திரன், சைவராஜ் ஆகியோர்  முன்னிலை வகித்தனர்.
தமிழ்நாடு விவசாயச் சங்க மாநிலத் துணைத் தலைவர் முகமது அலி, மாநிலக் குழு உறுப்பினர்கள் மணி, ராஜேந்திரன், மாவட்டச் செயலர் செல்லத்துரை உள்ளிட்டோர் கூட்டத்தில் பேசினர்.
முன்னதாக சங்க நிர்வாகி சாமிநாதன் வரவேற்றார். விவசாய சங்க கிளை உறுப்பினர் கென்னடி நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

First Published : 18 Mar 2012 11:54:50 AM IST

கரூர், மார்ச் 17: கரூர் உழவர் பயிற்சி நிலையம் சார்பில், ஐசோபாம் எண்ணெய் பண்ணை திட்டத்தின் கீழ், கடவூர் அருகேயுள்ள உடையாபட்டியில் விவசாயிகளுக்கு அண்மையில் பயிற்சி முகாம் நடைபெற்றது.
முகாமுக்கு உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை இயக்குநர் (பொறுப்பு) ஜெயந்தி தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி, ஊராட்சி  ஒன்றியக் குழு உறுப்பினர் அமுல்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உழவர் பயிற்சி நிலைய அலுவலர் மோகன்குமார் வரவேற்றார்.
காவேரி எண்ணெய் நிறுவன மேலாளர் அசோகன், கடவூர் வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் ஆகியோர் விவசாயிகளுக்கு  பயிற்சி அளித்தனர்.
நிறைவில், துணை வேளாண்மை அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் நவநீதன் செய்திருந்தார்.

## தாந்தோன்றிமலை வட்டார விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 18 Mar 2012 11:54:04 AM IST

கரூர், மார்ச் 17: கரூர் மாவட்டம், தாந்தோன்றிமலை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் சங்கரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
சொட்டு நீர்ப் பாசன மானிய விவரங்கள், பைப்லைன், உழவர் அட்டை, களம் அமைத்தல், செல்போன் மூலம் மோட்டார் பம்பு செட்டுகளை இயக்கும் முறைகள் குறித்து விளக்கிக் கூறப்பட்டது.

வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து உதவி விதை அலுவலர் மு. சிவப்பிரகாசம், வேளாண்மைத் துறை சார்பில் வேளாண் உதவி அலுவலர் து. கருப்பையா, தோட்டக்கலை துறை சார்பில் தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் செயற்பொறியாளர் ர. அசோகன், வேளாண் வணிகம், விற்பனை துறை சார்பில் உதவி வேளாண்மை அலுவலர் மு. கீதா, கூட்டுறவுத் துறை சார்பில் சார்பதிவாளர் முருகன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.
விவசாயிகளின் குறைகள் துறை வாரியாக கோரப்பட்டு உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சு. விஜயகுமார் வழங்கினார்.
வேளாண்மை அலுவலர் கோ. கவிதா, உதவி செயற்பொறியார் என். ராமநாதன், இளநிலை பொறியாளர் யு. ரங்கவிட்டல் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## பயிர் சாகுபடி பயிற்சி முகாம்

First Published : 18 Mar 2012 11:54:14 AM IST

கரூர், மார்ச் 17: தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் சார்பில், தாந்தோன்றிமலை வட்டார விவசாயிகளுக்கு அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.
தாந்தோன்றிமலையில் நடைபெற்ற இந்த முகாமில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துணை இயக்குநர் ரவி தலைமை வகித்தார்.
கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாய நலத் திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் விஜயகுமார், வேளாண் மானிய திட்டங்கள் குறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, சொட்டு நீர்ப் பாசனம், தோட்டக்கலைத் துறையின் மூலம் இயங்கி வரும் மானிய திட்டங்கள் குறித்து கரூர் வட்டார உதவி தோட்டக்கலை இயக்குநர் வளர்மதி ஆகியோர் பேசினர்.
வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படும் கடன்கள், உரம் இருப்பு குறித்து தாந்தோன்றிமலை கூட்டுறவு வங்கிச் செயலர் கிருஷ்ணமூர்த்தி, பயிர் ஆர்வலர் குழுக்கள் அமைப்பது, பதிவேடுகள் பராமரிப்பு பற்றி தன்னார்வத் தொண்டு நிறுவன சுகிலாராணி ஆகியோர் விளக்கினர்.
பயிற்சியில் கருப்பூர், லிங்கத்தூர், வெள்ளியணை, புலியூர் கிராம விவசாயிகள் பங்கேற்றனர்.
வேளாண் அலுவலர் ஷோபா, உதவி வேளாண் அலுவலர்கள் கீதா, சுப்பிரமணியன், பாலசுப்பிரமணியன், கோகுல் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## மண்புழு உரம் தயாரிப்புப் பயிற்சி

First Published : 18 Mar 2012 11:54:36 AM IST

கரூர், மார்ச் 17: கரூர் மாவட்டம், தோகைமலை வட்டாரம் கல்லுப்பட்டி கிராமத்தில் மண்புழு உரம் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் மாரியப்பன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் காதர்மொஹைதீன் மண்புழு உரத்தின் முக்கியத்துவம், அரசின் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து பேசினார்.

மண்புழு உற்பத்தியாளர் பணிக்கம்பட்டி கோபாலகிருஷ்ணன், மண்புழு வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு, மீன் கரைசல், அமிர்த கரைசல், எலுமிச்சை கரைசல், பஞ்சகவ்யம் தயாரிப்பு, இயற்கை வேளாண்மையில் மண்புழு உரத்தின் முக்கியத்துவம் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தார். இதில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். தோகைமலை வட்டார துணை வேளாண்மை அலுவலர் கண்ணதாசன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் இளங்கோவன், குணசேகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## புதருக்குள் மறைந்து கிடக்கும் உரக்கிடங்கு

First Published : 18 Mar 2012 02:49:43 PM IST

கும்மிடிப்பூண்டி, மார்ச் 17: கும்மிடிப்பூண்டியை அடுத்த எல்லாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியபாளையத்தில் உள்ள உரக்கிடங்கு புதர்களால் சூழப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது (படம்).

எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை அடுத்துள்ள கால்நடை மருத்துமனையை ஒட்டி உரக்கிடங்கு முன்பு செயல்பட்டு வந்தது. பின்னர் நீண்ட நாள்களாக இந்த உரக்கிடங்கு செயல்படவில்லை. தற்போது அந்த கிடங்கைச் சுற்றி புதர் மண்டி கிடக்கிறது. இதில் விஷ ஜந்துக்கள் தென்படுகின்றன. மேலும் சிலர் இதை சமூக விரோத செயல்களுக்கும் பயன்படுத்துகின்றனர்.

எனவே உரக்கிடங்கு செயல்படாவிட்டாலும் புதர் மண்டி கிடக்கும் இப்பகுதியை சுத்தப்படுத்துவதுடன், அந்த கட்டடத்தை வேறு பயன்பாட்டுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கு அரசு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## விவசாயிகளுக்கு விலையில்லா சாகுபடி பொருட்கள் வழங்கல்

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,00:22 IST

கருத்தை பதிவு செய்ய

நெல்லிக்குப்பம் : நெல்லிக்குப்பம் அடுத்த பி.என்.பாளையத்தில் "தானே' புயலால் பாதித்த விவசாயிகளுக்கு மீண்டும் பயிர் செய்ய சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் விலையில்லா சாகுபடி பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். துணை இயக்குனர் சந்திரமோகன், உதவி இயக்குனர் தனசேகரன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் சந்திரராசு வரவேற்றார். "தானே' புயல் மறுசீரமைப்பு கூடுதல் மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் விவசாயிகளுக்கு உளுந்து விதை, உயிர் உரங்கள் அடங்கிய சிறுதளைகளை வழங்கினார்.சீரமைப்பு அலுவலர் சம்பத்குமார், பேரூராட்சித் தலைவர் அர்ச்சுனன், ஆத்மா தலைவர் ராஜேந்திரன், தேவநாதன், ராமதாஸ் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு நாளை சான்று வழங்குதல்

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,00:39 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : நுண்ணீர் பாசன திட்டத்தில் முழு மானியம் பெறுவதற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு நாளை சான்று வழங்கும் முகாம் நடக்கிறது. விழுப்புரம் மாவட்டத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தின்(சொட்டு நீர் பாசனம்) கீழ் சிறு, குறு விவசாயிகள் தங்கள் நிலத்தில் செலவின்றி, அரசு சார்பில் முழுவதும் மானியமாக, சொட்டு நீர் பாசன கருவிகள் அமைத்து தரப்படுகிறது.

இத்திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கருவிகள் அமைக்க 43 ஆயிரத்து 816 ரூபாய் செலவாகிறது. இந்த தொகையை அரசே மானியமாக வழங்குகிறது. இந்த திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் சிறு அல்லது குறு விவசாயிகள் என்பதற்கான சான்றை வருவாய்த்துறை

தாசில்தாரிடமிருந்து பெற்று வழங்க வேண்டும்.
சிறு, குறு விவசாயிகள் சான்று பெறுவதற்கான அலைச்சலை மிச்சப்படுத்தும் சிறப்பு முகாம் நாளை (20ம் தேதி) திருக்கோவிலூர் சார் ஆட்சியர் அலுவலகத்திலும், விழுப்புரம், திண்டிவனம், கள்ளக்குறிச்சி கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் நடக்கிறது.
முகாமில், சான்று பெற்றவர்களுக்கு உடனடியாக மானிய தொகை ஒப்பளித்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களுக்கு திட்டத்தின் மூலம் சொட்டு நீர் பாசன கருவிகள் வரும் 31ம் தேதிக்குள் திட்ட செலவு கணக்கில் சேர்க்கப் பட்டு பயனடைய ஏற்பாடு செய்யப்படுகிறது.
இத்தகவலை கலெக்டர் சம்பத் தெரிவித் துள்ளார்.

## தானே புயலால் தர்பூசணி உற்பத்தி குறைவு

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,03:34 IST

கருத்தை பதிவு செய்ய
கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கோடை வெயில் உக்கிரத்தை தொடர்ந்து, தர்பூசணி விற்பனை அதிகரித்துள்ளது. வட மாவட்டங்களில், தானே புயலால் தர்பூசணி உற்பத்தி குறைந்ததால், விலை உயர்ந்துள்ளது.
தமிழகம் முழுவதும், நாளுக்கு நாள் வெயிலின் உக்கிரம் அதிகரித்து வருகிறது. ஆண்டு முழுவதும் குளிர்ந்த காலநிலை கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. வெயிலினால் உடலில் ஏற்படும் உஷ்ணத்தை தணித்துக்கொள்ள, மாவட்டத்தின் பல பகுதிகளில் சாலையோரம் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் தர்பூசணி பழங்களை, பொதுமக்கள் அதிகளவில் வாங்கிச் சாப்பிடுகின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு, விழுப்புரம், கடலூர், திண்டிவனம், பண்ரூட்டி ஆகிய பகுதிகளில் இருந்து, தினசரி தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வருகிறது. சமீபத்தில், இப்பகுதியில் ஏற்பட்ட தானே புயல் காரணமாக, சாகுபடி செய்யப்பட்டிருந்த தர்பூசணி சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. அதனால், தற்போது அப்பகுதிகளில் இருந்து குறைந்த அளவில் தான் தர்பூசணி விற்பனைக்கு வருகிறது. அதனால், தர்பூசணி விலை, எப்போதும் இல்லாத வகையில் உயர்ந்துள்ளது.
இது குறித்து தர்பூசணி வியாபாரி ஒருவர் கூறியதாவது: கோடை காலத்தில் உடலின் வெப்பத்தை தணிக்க, தர்பூசணி சாப்பிடுவதால் குளிர்ச்சி ஏற்படுகிறது. இதனால், பொதுமக்கள், தர்பூசணி பழத்தை வாங்கி ஆர்வத்துடன் சாப்பிடுகின்றனர். குழந்தைகளும் விரும்பி வாங்கி சாப்பிடுகின்றனர். பொதுவாக, விழுப்புரம், கடலூர், பண்ருட்டி, திண்டிவனம் ஆகிய பகுதியில்தான் தர்பூசணி பழங்கள் மற்ற மாவட்டங்களுக்கு, மாநிலங்களுக்கு விற்பனை

செல்கிறது. நடப்பாண்டு தானே புயல் காரணமாக தர்பூசணி வரத்து குறைந்துள்ளது.
குறிப்பாக, கிருஷ்ணகிரி நகரில் மட்டும் கடந்த காலத்தில் நாள்தோறும் நான்கு லாரி தர்பூசணி விற்பனைக்கு வந்தது. தற்போது இவற்றில், 50 சதவீதம் மட்டுமே விற்பனை வருகிறது. உற்பத்தி குறைவால், தர்பூசணி விலை உயர்ந்துள்ளது. மேலும், வாகன வாடகை உயர்வும், கூலி ஆட்கள் சம்பளம் உயர்வு ஆகியவற்றாலும் தற்போது தர்பூசணி விலை கடந்தாண்டை விட அதிகரித்துள்ளது.
ஒரு கிலோ தர்பூசணி, 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு கீற்று, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கோடை காலத்தில் மட்டும் விற்பனைக்கு வரும் தண்ணீர் சத்து மிகுந்த இந்த தர்பூசணி பழங்களை விலையை பற்றி கவலைப்படாமல், பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சாப்பிடுகின்றனர்.
இவ்வாறு அவர் கூறினார்.

**"கதம்பம்' வாழை விளைச்சல் ஜோர் : வரவேற்பால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,05:25 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : ஈரோடு மாவட்டம் கருக்குப்பாளையத்தில், அனைத்து வாழை ரகங்களும் கலந்த, "கதம்பம்' வாழையின் விளைச்சல் சிறப்பாக உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில் கோபி, குன்னத்தூர், பெருந்துறை, பவானி உள்ளிட்ட பல பகுதிகளில், பல்லாயிரக் கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்படுகிறது. கதளி, நேந்திரம், ரொபஸ்டிரா, ரஸ்தாளி, மொந்தன், பச்சைநாடன், தேன் வாழை உள்ளிட்ட ரகங்கள் பயிரிடப்படுகின்றன.
கடந்த சில ஆண்டாக மஞ்சள் விலை ஏறுமுகமாக இருந்ததால், வாழை மற்றும் கரும்பை தவிர்த்து, மஞ்சளை அதிகம் பயிரிட்டனர். வாழை உற்பத்தி கணிசமான குறைந்ததால், மார்க்கெட்டில் வாழை வரத்து குறைந்தது.
நடப்பாண்டு துவக்கத்தில் மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால், மஞ்சளை கைவிட்டு, வாழை சாகுபடிக்கு விவசாயிகள் மாறினர். நடப்பாண்டு வாழை அறுவடை சீஸன் அனைத்து பகுதிகளிலும் மும்முரமாக நடந்து வருகிறது. கோடையில் வாழையின் வளர்ச்சி அபாரமாக இருப்பதால், வாழை சாகுபடியில் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
பவானியில் அனைத்து வாழை ரகத்தையும், ஒன்றிணைத்து "கதம்பம்' வாழையாக, ஒரே பகுதியில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.
அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், ""பவானி பகுதியில் வாழையின் விளைச்சல் ஜோராக உள்ளதால், அதிப்படியான விவசாயிகள் வாழையை பயிரிட்டுள்ளனர். கதளி, நேந்திரம், ரொபஸ்டிரா, ரஸ்தாளி, மொந்தன், பச்சைநாடன், தேன் வாழை உள்ளிட்ட வாழைப்பழ

ரகங்களை சாகுபடி செய்கின்றனர். கருக்குப்பாளையில் அனைத்து ரக வாழைகளையும், ஒரே தோட்டத்தில் வைத்து சில விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.
ஒரே இடத்தில் அனைத்து ரக வாழைப்பழங்களும் கிடைப்பதால், பல வியாபாரிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். கதளி ஒரு கிலோ, 21 ரூபாய்க்கும், நேந்திரம், 16, செவ்வாழை ஒரு தார், 450, ரஸ்தாளி 275, தேன் வாழை 380, ரொபஸ்டிரா 220, மொந்தன் 210, பச்சை நாடா 180க்கும் விற்பனையாகிறது," என்றனர்.

## வெயில் தாக்கம் அதிகரிப்பால் ஈரோட்டில் இளநீர் விற்பனை ஜோர்!

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,05:26 IST

கருத்தை பதிவு செய்ய
ஈரோடு: கோடை சீஸனை யொட்டி ஈரோட்டில் இளநீர் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. விற்பனை அதிகாரிப்பால் விலையும் ஐந்து ரூபாய் உயர்ந்துள்ளது.
பொள்ளாச்சி, அவல்பூந்துறை, தர்மபுரி, ஆத்தூர், காங்கயம், வெள்ளோடு மற்றும் ஈரோடு சுற்றுவட்டார பகுதியில் அதிக பரப்பளவில் தென்னை மரம் வளர்க்கப்படுகிறது. பெரும்பாலும் எண்ணெய் அரவை மில்லுக்குதான் தேங்காய் அனுப்புகின்றனர். தவிர, மூகூர்த்த சீஸன் மற்றும் கோவில் திருவிழா காலங்களில் தேங்காய் விற்பனை அதிகமாக இருக்கும். இதன் காரணமாக விலையும் தாறுமாறாக இருக்கும்.
பலரும் கோடை சீஸனை யொட்டி இளநீர் விற்பனையில் தீவிரம் காட்டி வருகின்றனர். சென்ற மார்ச் மாதம் முதல் கோடை வெயிலின் தாக்கம் உச்சத்தை அடைந்து வருகிறது. இதை தவிர்க்கும் பட்சத்தில் மக்கள் பழச்சாறு, பழம் வகைகள், இளநீர், கரும்பு பால் போன்றவற்றை வாங்கி அருந்துகின்றனர். இளநீர் அதீத தாகத்தை தணிக்கவும், உடல் சூட்டை தணிக்கும் தன்மையும் அடங்கி உள்ளதால் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.
ஈரோட்டில் கோடை சீஸனை யொட்டி, பிரப் சாலை, அகில்மேடு வீதி, பெருந்துறை சாலை, சத்தி ரோடு மற்றும் நகரங்களில் பல்வேறு பகுதிகளில் இளநீர் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் பல்வேறு பகுதியில் இருந்து, தினசரி ஏழு லோடு வரை விற்பனைக்கு வருகிறது. விற்பனையும் களைகட்டி உள்ளதால், 10 முதல் 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது, ஐந்து ரூபாய் வரை அதிகரித்து, 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

## மாற்றுத் தொழிலை தேடும் அவலம் : நாட்டுக்கோழி வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,05:25 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: விவசாயத்தில் லாபமின்மையால், விவசாயிகள் நாட்டுக்கோழி மற்றும் பன்றி வளர்ப்புக்கு மாறி வருகின்றனர்.

இந்தியாவில், நாமக்கல், ஐதராபாத், மேற்கு வங்கம் ஆகிய பகுதிகளில் கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ளதால், இங்கு தினமும் கோடிக்கணக்கில் வர்த்தகம் நடக்கிறது.

தமிழகத்தில் நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்கள் கறி மற்றும் முட்டை கோழிப்பண்ணைகள் அதிகம் உள்ளன. ஈரோடு மாவட்டத்தில் 106 முட்டை கோழி பண்ணைகளில் 41.38 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகிறது. 1,197 கறிக்கோழி பண்ணைகளில் 63.9 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்படுகிறது.

ஈரோட்டில் பெருந்துறை, ஈரோடு பகுதியில் முட்டை கோழி பண்ணைகளும், காங்கேயம், தாராபுரம், மூலனூர் பகுதிகளில் கறிக்கோழி பண்ணைகளும் உள்ளன. ஈரோடு மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகப்பெரிய வளர்ச்சியடைந்துள்ளது. கவுந்தப்பாடி அருகே பெருந்தலையூர் பஞ்சாயத்து சிரையாம்பாளையத்தில், விவசாயிகள் விவசாயத்தை விட்டு மாற்று தொழிலுக்கு செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள கிட்டுசாமி கூறியதாவது: விவசாயத்துக்கு முன்பு போல ஆட்கள் கிடைப்பதில்லை. போதிய வருவாய் இல்லை. எனவே மாற்றுத்தொழிலாக நாட்டுக்கோழி மற்றும் வெண்பன்றி வளர்ப்புக்கு மாறியுள்ளோம். 45 நாளேயான நாட்டுக்கோழி குஞ்சுகளை அந்தியூர் சந்தையில் வாங்குகிறோம். ராகி, கம்பு, சோளம், சின்னவெங்காயம், கருவாடு ஆகியவைகளை கோழிக்கு உணவாக வைக்கிறோம்.

சின்னவெங்கயத்தை கோழிகள் விரும்பி சாப்பிடும். கோழி பட்டியில் இருப்பதைவிட காட்டில்தான் அதிக நேரம் சுற்றித்திரியும். நாட்டுக்கோழிகள் செடி, கொடி, அருகம்புல் என பச்சை இலைகள் உண்பதில் அதிக ஆர்வம் காட்டும்.

கோழிகளுக்கு தரமான தீனி கொடுத்தால் நல்ல எடை, புரதச்சத்து மிகுந்ததாக வளர்கிறது. நாமக்கல் பகுதியில் இருந்து இறைச்சிக்காக வெண்பன்றி வாங்கி வந்துள்ளோம்.

இயற்கையான, காற்றோட்ட வசதியுடன் தனியாக கூண்டு அமைத்துள்ளோம். கல்லூரி ஹாஸ்டல்களில் மீதமாகும் உணவுகளை கொண்டு வளர்த்து வருகிறோம். இவ்விரு தொழில் துவங்கி ஓரிரு வாரங்கள் தான் ஆகின்றன. இதற்கான விலை இன்னும் நிர்ணயிக்கவில்லை. நல்ல வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## மூலிகை விவசாயிகளுக்கு மானியம் வழங்கல்

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,04:25 IST

திருப்பூர்:திருப்பூர் மாவட்டத்தில் மூலிகை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு 56 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.மூலிகை பயிர்கள் வளர்க்கும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. தாராபுரம் மற்றும் மூலனூர் வட்டாரங்களில் மூலிகை பயிரிட்டுள்ள விவசாயிகள் குழுக்களுக்கு மானியத்தை கலெக்டர் மதிவாணன் வழங்கினார்.நல்லம்பாளையத்தில் உள்ள சூரியம்மன் மூலிகை பயிர் வளர்ப்போர் சங்கத்தில் உள்ள 20 விவசாயிகளுக்கு 14.92 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

இக்குழுவினர் 21.7 ஹெக்டேர் பரப்பில் மூலிகை வகைகள் பயிரிட்டுள்ளனர்.
கொளத்துப்பாளையம் சென்னி ஆண்டவர் மூலிகை வளர்ப்போர் நலச்சங்கத்துக்கு 11.48 லட்சம் வழங்கப்பட்டது. இதில், 21 விவசாயிகள் 16.7 ஹெக்டேரில் மூலிகை பயிரிட்டுள்ளனர்.ஆலம்பாளைம், நாவலடியான் குழுவுக்கு 9.76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இக்குழுவில்18 விவசாயிகள் 14.2 ஹெக்டேரிலும், மூலனூரில் ஸ்ரீபழனியாண்டவர் மூலிகை பயிர் சாகுபடியாளர் சங்கத்தில் 36 பேர் 29 ஹெக்டேரிலும் மூலிகை பயிரிட்டுள்ளனர். இச்சங்கத்துக்கு 19.93 லட்சம் ரூபாய் மானியம் என மொத்தம் 95 பேருக்கு 56.1 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.
வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டத்தில் இப்கோ-டோக்கியோ நிறுவனத்தில் இன்சூரன்ஸ் செய்து, பயிர் சேதம் ஏற்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில் 10 விவசாயிகளுக்கு 60 ஆயிரம் ரூபாய் காப்பீட்டு தொகை வழங்கப்பட்டது. பயிர் காப்பீடு திட்டத்தில் ஐந்து பேருக்கு காப்பீட்டு தொகை வழங்கப்பட்டது.

## திசு வாழைக்கு மானியம்

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,01:13 IST

கருத்தை பதிவு செய்ய
கொட்டாம்பட்டி:""கொட்டாம்பட்டியில் திசு வாழைச் சாகுபடி விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது," என, தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரி தெரிவித்தார்.அவர் கூறியதாவது: கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் திசு வாழை சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திசு வாழைக் கன்றுகளுக்கு எக்டேருக்கு ரூ.31 ஆயிரத்து 202 மானியம் வழங்கப்படும்.

விவசாயிகள், ரேஷன்கார்டு ஜெராக்ஸ், சிட்டா அடங்கல், 2 பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்களுடன் மார்ச் இறுதிக்குள் தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்,என்றார்.

### இருபோக நெல் சாகுபடி "கட்' கவலையில் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2012,23:29 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர்:கூடலூர் ஒட்டான்குளம் கண்மாயை நம்பியிருந்த இரு போக நெல் விவசாயம் பாதிக்கப்பட்டு தரிசு நிலமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஒட்டான்குளம் கண்மாயை நம்பி 500 ஏக்கரில் இரு போக நெல் சாகுபடி உள்ளது. இக்கண்மாய்க்கான நீர்வரத்து சுரங்கனாறு நீர்வீழ்ச்சியில் இருந்து கிடைக்கிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சுரங்கனாறு நீர்வீழ்ச்சி அருகே மண்சரிவு ஏற்பட்டதில், நீர்வீழ்ச்சியில் இருந்து ஒட்டான்குளம் கண்மாய்க்கு வர வேண்டிய நீர்வரத்து வாய்க்கால் திசைமாறியது. இதனால், கண்மாய்க்கு நீர்வரத்து இன்றி முதல் போக நெல் சாகுபடி துவங்க முடியாத நிலை ஏற்பட்டது. மண் சரிவு ஏற்பட்ட பகுதியை ஆண்டிபட்டி எம்.எல்.ஏ.,தங்க தமிழ்செல்வன் நேரில் பார்வையிட்டு, மண்சரிவு உடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இதுவரை சீரமைப்பு பணிகள் நடைபெறவில்லை. இதனால் ஒட்டான்குளம் கண்மாய்க்கு நீர்வரத்து இன்றி இரு போக நெல் விவசாயமும் பாதிக்கப்பட்டது. வரும் ஜூன் மாதம் மீண்டும் முதல் போக சாகுபடி துவங்கும் முன் சுரங்கனாறு நீர்வீழ்ச்சி அருகே மண்சரிவை சீரமைப்பது கேள்விக்குறியாகி உள்ளது. இதனால் தரிசு நிலமாக மாறி விடும் சூழ்நிலை உருவாகியுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

### தென்னை நார்க்கழிவில் உரம்: விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2012,23:24 IST

கருத்தை பதிவு செய்ய

பெரியகுளம்:பெரியகுளம் பகுதியில் தென்னை நார்கழிவை இயற்கை சுழற்சி மூலம் பயனுள்ள உரமாக நிலங்களுக்கு பயன்படுத்துவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை

பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கப்பட்டு கடைசியாக நார்கழிவுகளை வீணாக்குகின்றனர். நார்கழிவுகளை தீயிட்டு கொளுத்துவதால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது. பெரியகுளம் பகுதியில் விவசாயிகள் சிலர் வீணாகும் நார்கழிவுகளை இயற்கை உரமாக பயன்படுத்த மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்க செய்கின்றனர்.ஒரு எக்டேர் பரப்பளவு கொண்ட தென்னையிலிருந்து ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரை மட்டைகள் கிடைக்கிறது. இவற்றிலிருந்து ஒரு டன் எடையுள்ள நார்கழிவுகள் கிடைக்கும். இந்த நார்கழிவுகளை சிப்பிக்காளான் பயன்படுத்தி சத்துமிக்க இயற்கை உரம் தயாரிக்கலாம், என விவசாயிகள் தெரிவித்தனர்.

### நெல் கொள்முதல் நிலையத்தில் மூடைகள் தேக்கத்தால் பாதிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2012,23:20 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூடைகள் தேங்கி கிடப்பதால், புதிதாக கொள்முதல் செய்ய மறுத்து வருகின்றனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில், பெரியகுளம் மேல்மங்கலத்தில் பிப். 27 முதல் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இங்கு கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூடைகளை எடுத்துச்செல்லாமல் அங்கேயே விட்டு வைத்துள்ளனர். கொள்முதல் செய்த நெல்லுக்கு பணம் பட்டுவாடா செய்வதிலும் காலம் கடத்துகின்றனர். மூடைகள் தேங்கி கிடப்பதால்,தினமும் நெல்கொள்முதல் செய்வதில்லை. கடந்த எட்டு நாட்களாக கொள்முதல் செய்த நெல்லுக்கு பணம் பட்டுவாடா செய்யவில்லை. தேவதானப்பட்டி, குள்ளப்புரம், பொம்மிநாயக்கன்பட்டி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தனியாருக்கு எடை அதிகமாக கொடுத்து குறைந்த விலைக்கு விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, மாவட்ட விவசாய சங்க தலைவர் கண்ணன்,கலெக்டர் பழனிசாமியிடம் புகார் மனு அளித்துள்ளார்.

### கரும்பு நாற்றுகள் தயாரிப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2012,22:10 IST

கருத்தை பதிவு செய்ய

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், சிவகங்கை சக்தி சர்க்கரை ஆலை உதவியுடன்

"நீடித்த நவீன கரும்பு சாகுபடியில் (எஸ்.எஸ்.ஐ.,) நாற்றங்கால் தொழில் நுட்பம்' குறித்த பயிற்சி நடந்தது. சர்க்கரை ஆலை நிர்வாக அலுவலர் வேணுகோபால் துவக்கி வைத்தார். உதவி பேராசிரியர் ராதிகா, உதவி பேராசிரியர்கள் முத்துராமு, ராஜேந்திரன் பேசினர். ஏற்பாடுகளை தொழில்நுட்ப உதவியாளர்கள் கவிதா, அருணாதேவிசெய்திருந்தனர்.

---

தினகரன்

### ஏக்கருக்கு கி20 ஆயிரம் மல்பரி செடிக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-18 11:02:50

தர்மபுரி, : மல்பரி செடிக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 1 ஏக்கருக்கு கி20 ஆயிரம் வரை அரசு மானியமாக வழங்குகிறது என்று உதவி இயக்குனர் கூறினார்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே உள்ள சீலநாயக்கனூர் கிராமத்தில் பட்டு வளர்ச்சி குறித்த விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது. பென்னாகரம் பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் தனபால் தலைமை தாங்கினார். மண்டல இணை இயக்குனர் (பொ) சாம்தேவதாஸ், ஓசூர் பட்டு பயிற்சி நிலைய முதல்வர் வேணுகோபால், விஞ்ஞானி சமுத்திரவேல், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் முகுந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் தனபால் பேசியதாவது:

பட்டு விவசாயிகளுக்கு அரசு சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. 1 ஏக்கர் உயர் விளைச்சல் தரும் மல்பரி செடிகளை சாகுபடி செய்வதற்கு கி4,125ம், தனி புழு வளர்ப்பு மனை அமைக்க 700 சதுர அடி பரப்பளவிற்கு கி25 ஆயிரம் வழங்கப்படுகிறது. மல்பரி செடிக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 1 ஏக்கருக்கு கி20 ஆயிரம் வரை அரசு மானியமாக வழங்குகிறது. வெயில் காலத்தில் புழு வளர்க்கும் மனைகளை குளிர்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டும். அதற்கு தண்ணீரில் நனைத்து ஈரப்பதத்துடன் கூடிய சாக்குகளை தொங்கவிட வேண்டும். அப்போது தான் புழுக்கள் வெப்பத்தை தாங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் விரிவாக்க மையத்தில் 90.50 மெட்ரிக் டன் நெல் விதைகள் இருப்பு கலெக்டர் தகவல்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-18 12:34:32

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் 90.50 மெட்ரிக் டன் நெல் விதைகள் இருப்பு இருப்பதாக கலெக்டர் மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.
புதுக்கோட்டை கலெக்டர் மகேஸ்வரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு :
புதுக்கோட்டை மாவட்டத்தில் பிப்ரவரி 2012 வரை நெல் 95,741 எக்டேர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 6,912 எக்டேர், பயறுவகை பயிர்கள் 9,496 எக்டேர், கரும்பு 8,048 எக்டேர், எண்ணெய் வித்துப்பயிர்கள் 17,350 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 90.50 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 49.94 மெட்ரிக் டன் பயறு விதைகளும் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயன் பெறலாம். உரிமம் பெற்ற தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தற்பொழுது டிஏபி 1,240 மெட்ரிக் டன், யூரியா 5,098 மெட்ரிக் டன், பொட்டாஷ் 1,887 மெட்ரிக் டன், 6,425 மெட்ரிக் டன் காம்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் வேளாண்மை துறையில் பயிர் உற்பத்தியினை இரட்டிப்பாக்கி விவசாயிகளின் வருமானத்தினை 3 மடங்காக உயர்த்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நீரை சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுத்துவதால், பாசன நீர் தேவையை குறைத்து உற்பத்தி திறனை உயர்த்திடவும் உரம் மற்றும் நீர் பயன்பாட்டு திறனை அதிகரித்து சாகுபடி செலவினை குறைத்திடவும், நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவித மானியமும் வழங்கிட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.
புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டத்தில் 200 எக்டேர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு செயல்படுத்திட ஆணை வரப்பெற்றுள்ளது. மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தினை தொடர்புகொள்ளலாம். மேலும் நேரடி நெல்கொள்முதல் நிலையம் தேவை குறித்து விவசாயிகள் தெரிவித்தால் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கலெக்டர் மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

**மல்லிகை விலை குறைந்தது விவசாயிகள் கவலை பெண்கள் மகிழ்ச்சி**

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-17 10:06:25

தேவாரம்: மல்லிகை பூக்கள் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஆனால் பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேவாரம் அருகே உள்ள சீலையம்பட்டி, பல்லவராயன்பட்டி, மேலசிந்தலைச்சேரி, கோம்பை, லட்சுமிநாயக்கன்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகை, செண்டுப்பூ, மரிக்கொழுந்து, க னகாம்பரம் பூக்கள் விவசாயம் அதிகம் நடக்கிறது. இப்பகுதிகளில் விளையும் பூக்கள் மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.

பூக்கள் விவசாயத்திற்கு பெரும் சோதனையாக இருப்பது மார்கழி மாதம். இம்மாதத்தில் அதிகமான பனிப்பொழிவு காரணமாக பூக்கள் கருகி விடுகின்றன. குறிப்பாக மல்லிகை பூக்கள் மொட்டுகளிலேயே உதிர்ந்து விடும்.

தை மாதத்தில் திருமணங்கள் அதிகம் நடக்கும். மார்கழி பனியில் பூக்கள் கருகியதால், தை மாதத்தில் கடும் தட்டுப்பாடு ஏற்படும். ஒரு கிலோ ரூ.1000 வரை விற்பனை ஆவதுண்டு. தற்போது பங்குனி மாதத்தில் விஷேங்கள் குறைவாக இருக்கும். பனியில்லாததால் பூக்கள் விளைச்சல் அதிகமாக உள்ளது. இதனால் விலை குறைந்துள்ளது. பறிப்பு கூலி கூட கட்டுபடியாவதில்லை என்று விவசாயிகள் புலம்ப ஆரம்பித்துள்ளனர்.

மல்லிகை தற்போது கிலோ ரூ.60 முதல் 150 வரை விற்கப்படுகிறது. உதிரி மல்லிகை தெருக்களில் கூவி கூவி விற்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு வருத்தமளித்தாலும், மல்லிகை விலை குறைந்திருப்பது பெண்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

---

**தேயிலை தூள் விலை வீழ்ச்சி**

*குன்னூர், மார்ச்.19–*

*குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைந்தது. மேலும் 86 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.*

*ஏலம்*

*குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய*

இரு நாட்கள் தேயிலை ஏலம் நடைபெறு கிறது. இந்த ஏலத்தில் உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்குபெற்று தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகிறார்கள்.
விற்பனை எண் 11–க்கான ஏலம் கடந்த 15, 16 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 78 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 6 லட்சத்து 94 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 84 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.
பாகிஸ்தான்
ஏலத்தில் உள்நாட்டு வர்த்த கம் சுமாரான நிலையில் இருந் தது. வெளிநாட்டு வர்த்தகர்க ளை பொறுத்த வரை பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்தகர்கள் பங்கு பெற்றனர். ஏலத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது.இருப்பினும் தேயிலை தூளுக்கு தேவை அதிகம் இல்லாததால் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது. 155 ரூபாய் என்பது சி.டி.சி ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக இருந்தது.
ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூள் 210 என்று உயர்ந்தபட்ச விலையாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில்இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.
டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 55 ரூபாயில்இருந்து 58 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 155 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.
விற்பனை எண் 12–க்கான ஏலம் வருகிற 22, 23 ஆகிய தேதிகளில் நடக் கிறது. ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## குன்னூர் உபாசியில் தங்க தேயிலை விருதிற்காக தேயிலை தூள் ஆய்வு செய்யும் பணி தொடக்கம்

குன்னூர், மார்ச்.19–
தங்க இலை விருது பெறு வதற்க்கான தேயிலை தூளை ஆய்வு செய்யும் முதல் கட்ட பணி குன்னூர் உபாசியில் தொடங்கியது.
தேயிலை வாரியம்
உலக அளவில் தென்னிந்திய தேயிலை தூளின் விலையை உயர்த்துவதற்காக தேயிலை வாரியம் பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தென்னிந்திய தேயிலை தூளுக்கான தங்க இலை விருது போட்டி ஆண்டு தோறும் நடத்தப்படுகிறது.
இந்த போட்டிகளில் தென் மாநிலங்களை சேர்ந்த தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற பகுதிகளில் உள்ள தேயிலை தூள் உற்பத்தி யாளர்களின் தேயிலை தூள் பங்குபெறுகிறது. இந்த போட்டியில் சிறு தேயிலை தொழிற்சாலைகளும் கலந்து கொள்கின்றன.

தென்னிந்திய தேயிலை தங்க இலை விருது வழங்கும் விழா அடுத்த மாதம் 5–ந் தேதி துபாயில் நடைபெற உள்ளது. இந்த போட்டிக்கான தேயிலை தூள் ஆய்வு செய்யும் முதல் கட்ட போட்டி உபாசியில் நடைபெற்றது.

இதில் 60–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் பங்கு பெற்றன. 195 வகையான தேயிலை தூள் போட்டியில் இடம் பெற்றது. இதில் கொச்சி, குன்னூர், கொல்கத்தா ஆகிய இடங்களில்இருந்து தேயிலை வர்த்தகர்கள், நிபுணர்கள் நடுவர்களாக பணியாற்றி னர்.

8–வது போட்டி

இந்த ஆய்வு போட்டியில் தேயிலை தூள் வகைகளின் தரம், மணம், சுவை ஆகிய குணங்கள் ஆய்வு செய்யப் பட்டது. விருது வழங்கும் கமிட்டி அமைப்பாளர் ஸ்ரீதரன் இது குறித்து நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய தாவது:–

தென்னிந்திய தேயிலை தூளுக்கு சர்வதேச சந்தையில் தேவை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தங்க இலை விருதுக்கான போட்டி நடத்தப் படுகிறது. இந்த ஆண்டு நடைபெறும் போட்டி 8–வது போட்டி ஆகும்.

முதல் கட்ட ஆய்வில் தேர்வு செய்யப்படும் தேயிலை தூள் அடுத்த மாதம்4–ந் தேதி துபாயில் நடக்கும் இறுதி கட்ட ஆய்வுக்கு அனுப்பப் படும். தேர்வு செய்யப்படும் சிறந்த தேயிலை தூளை உற்பத்தி செய்த தொழிற் சாலைக்கு விருது வழங்கும் விழா வருகிற ஏப்ரல் மாதம் 5–ந் தேதி துபாயில் நடக் கிறது.

தங்க தேயிலை விருது பெறும் தேயிலை தூள் உலக தரம் வாய்ந்தவையாக இருப்ப தால் சர்வதேச சந்தையில் இவற்றின் சந்தையை அதிகப்படுத்த இந்த விருது உதவும்.